## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன்கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை

வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

## 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் பிரிவின் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளில் உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 12,354,598 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | காசு பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படும் போது முதலீடு காசேட்டில் சரியாக காட்டப்பட்டுள்ளது. ஆண்டில் சொத்துக்களை கையேற்றல்களின் பெறுமதி ரூபா 72,323,199 ஆக இருந்தது.அப்பெறுமானத்தில் ஆண்டில் கிடைத்த நன்கொடையின் பெறுமதி ரூபா 304,735 ஆன நானாவதிக கடன்பட்டோரின் பெறுமதியான ரூபா 9,880,645 பெறுமதி கூட்டுத்தொகை கழிக்கப்பட்டதன் பெறுமதி ரூபா 62,156,162 தொகை சொத்துக்கள் கையேற்றலின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் கொள்வனவின் போது உருவாகும் கடன் கொடுத்தோரின் ஆரம்ப மீதி சீராக்கப்பட வேண்டும் |
| (ஆ) | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதியில் மேலும் பயன்படுத்தப்பட்டு வந்த ரூபா 22,979,374 கிரயமான நூலகப் புத்தகங்கள் மீள் மதிப்பீடு செய்வதற்கோ அல்லது அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | நூலகப் புத்தகங்களின் ஆயுட்காலத்தை தீர்மானிப்பது மிகவும் சிரமமாகும். அவ்வாறே புத்தகங்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு விசேட அறிவுள்ள நபர்கள் குறைவாக இருத்தல், பாரியளவு புத்தகங்கள் சந்தை விலை அடிப்படையில் மதிப்பீடு செய்தல்குறிப்பான இருப்பொன்று இருப்பதை தீர்மானிப்பதில் சிக்கல் மற்றும் அதற்காக எடுக்கும் காலம் உட்பட செலவினத்தையும் கருத்திற் கொள்ளும் போது இது நடை முறைச் சாத்தியமற்றாகும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| விளையாட்டரங்கின் நில விரிப்புக்கள் கொள்வனவிற்காக செலுத்த வேண்டிய ரூபா 760,437 தொகை நிதிக் கூற்றுக்களில் அட்டுறு செலவினங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | களஞ்சிய பொருட்கள் பெறுவனவு பற்றுச்சீட்டு இல. 4119 இல் குறிப்பிட்ட பெறுமதியில் ரூபா 192,000 பெறுமதியான Table Tennice Flooring Mat மற்றும் Gym ball | சரியான அட்டுறு செலவினங்களின் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

set பெறுமதியான ரூபா 9,450 ஆகிய பெறுமதிகள் மூலதன மாக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 694,737 பெறுமதியான மீண்டெழும் செலவினங்கள் (Rehablilitation Expenses) ஆக இருந்ததுடன் ரூபா 65,700 தொகை மீண்டெழும் செலவிமாகும் அவ்வாறே 4085 இன் கீழ் வரும் ரூபா 558,987 பெறுமதியான Rubber Carpet மற்றும் Yoga mat உம் மூலதனமாக்கப்படாமையால் எஞ்சிய தொகையான ரூபா 1,940,355 விளையாட்டு உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2019 செப்தம்பர் 20 ஆந் திகதி நிறுவகம் தொடர்பாக நடை பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற் குழுவின் பரிந்துரை | | | |
| பரிந்துரை இல. 05 | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் பல்கலைக்கழகங்களின் கீழ் காணப்படும் சகல நிறுவனங்களுக்கும் வேறாக உள்ளக கணக்காய்வு பிரிவொன்று நடாத்திச்செல்வதற்கு அத்தியவசியமானதென குறிப்பிட்ட செயற்குழு அதற்கு இணங்க நிறுவகத்திற்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய கிரயஎல்லைக்குள் உள்ளக கணக்காய்வுப் பிரிவினை தாபிப்பதற்கு தவறியிருந்தது. | உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்றை ஏற்படுத்துவதற்காக அங்கீகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரப்பட்டிருந்தது. | செயற்குழுவின் பரிந்துரை பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பரிந்துரை இல. 13 | மாணவர்கள் பாடநெறியை விட்டுச்செல்லும் போக்கு காணப்படுவதால் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்து வெளியேறும் மாணவர்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் அவர்கள் தற்போது தொடர்புள்ள துறைகள் தொடர்பாக தரவு முறை யொன்றை தயாரிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் அத்தரவு முறைமை தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | பாடநெறியை விட்டுச் செல்லும் மாணவர்கள் பாடநெறியை விட்டுச் செல்வதற்கு ஏதுவான விடயங்கள் மற்றும் அவர்களின் தற்போதய நிலை உள்ளடக்கிய தரவு முறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது | செயற்குழுவின் பரிந்துரை பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 756 ஆம் இலக்க நிதிப்பிரமாணம் | தேசிய ஆயுர்வேத போதனா வைத்திய சாலைக்கு 2014 யூலை 31 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்த ரூபா 1,659,145 பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் மீளாய்வாண்டின் போது கணிப்பீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | பொருட் பதிவேட்டினை பராமரித்தல் வைத்தியசாலையின் செயற்பாடாக இருந்த போதும் உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான நிறுவகத்தினால் அப்பொருட்கள் பரீட்சிக்கப்பட்டு அதன் இருப்பினை உறுதிப்படுத்தியுள்ளது எதிர்காலத்தில் அச்செயற்பாடுகளை மேலும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 140,992,411 ஆன பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 25,724,695 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 115,267,716 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டில் செயற்பாட்டு செலவினம் ரூபா 217,478,692 ஆல் அதிகளவில் அதிகரித்தமை மற்றும் செயற்பாட்டு வருமானம் ரூபா 101,210,976 ஆல் ஒப்பீட்டளவில் சிறய அளவினால் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 24 ஆண்டுகளுக்கு முன்னிருந்து மாணவர் விடுதி பேணிச் செல்லப்பட்டிருந்த நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடத்துடனான காணியை உள்நாட்டு மருத்து விஞ்ஞான நிறுவகத்திற்கு கையேற்பதற்கு 2019 ஆகஸ்ட் மாதம் 28 ஆந் திகதி முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு கிடைக்கப்பெற்ற பணம் அமைச்சின் அவதானிப்பின் பிரகாரம் இக்காணி 2014 பெப்ரவரி 14 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தமையால் அதன் விருப்பத்தை பெற்றுக்கொண்டு காணியை கையேற்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடத்துடனான காணியை 2014/01/27 ஆந் திகதிய 1-132/503/1735/13 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப் பட்டிருந்ததுடன் 2019/08/29 ஆந் திகதிய 095/110/2221/19 ஆம் இலக்க பத்திரத்தின் மூலம் உயர்கல்வி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டது. எதிர்காலத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான நிறுவகத்திற்கு கையேற்பதற்குே தவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | காணியை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குத்தகை கட்டிடமொன்றின் ஒரு பகுதி உடைத்து அகற்றப்பட்டு ரூபா 1,991,507 செலவினமொன்று மேற்கொண்டு வாசிப்பு மண்டபமொன்று நிர்மாணிக்கப்பட்டு 2019 யூலை 23 ஆந் திகதி நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2020 செப்தம்பர் 08 ஆந் திகதி வரை அக்கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தாடர்பாக நிறுவகத்தின் வேலை அத்தியட்சகருக்கும் நிர்வாகி (சிவில் பரிந்துரைத்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எதிர்காலத்தில் அவ்வாறான நிர்மாணங்களுக்கு உரிய பிரிவுத் தலைவரின் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நலன்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலைமைக்கு உட்படுத்த வேண்டும். |
| (ஆ) | ரூபா 6,538,929 பெறுமதியான 04 ஒப்பந்தங்களில் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டி | நிதிக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் முறையான பரிசோதனையொன்று மேற் | குழுவின் பரிந்துரைகள் கருத்திற் |

| | | |
|---|---|---|
| ருந்தமையால் 2019 மே 06 ஆந் திகதிய ஆரம்ப புலனாய்வுக் குழு அறிக்கையில் முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் முறையான பரிசோதனையொன்று 2020 செப்தம்பர் 08 ஆந் திகதி வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. இதில் உள்ளடக்கப்பட்ட 03 ஒப்பந்தங்களுக்காக உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 652,092 ஆன தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கொள்ளப்படவில்லையென இதன் மூலம் அறிய தருகின்றேன். நிறுவகத்தின் மாணவர் போராட்டம், கல்விசாரா ஊழியர் வேலை நிறுத்தம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற விடயங்கள் ஒப்பந்தம் தாமதமாவதற்கு காரணமாக இருந்ததால் உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணங்கள் அறவிடப்படவில்லை. | கொள்ளப்பட வேண்டியதுடன் உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்பட்ட சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலை நிலை உட்பட 15 பதவிகளில் 67 வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. . | இப்பதவிகளல் வேலை நிர்வாகி, சுகாதார சேவை தொழிலாளர் கள், புத்தக கட்டுநர், ஒழுக்காற்று உத்தியோகத்தர் உட்பட 32 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டு நிர்வாக சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாட்டில் காணப்பட்ட தேர்தல் காலம் முடிவடையும் வரை ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டிருந்தது. | பதவியணியினர் எண்ணிக்கை மற்றும் காணப்படும் வெற்றிடங்கள் மீளாய்வு செய்யப்பட்ட தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

# 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் தட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றும் அக்காலப்பகுதியில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிலைமை பொருண்மையான வகையில் காண்பிக்கப்படாமையால் பௌதீக செயலாற்றலை மதிப்பீடு செய்ய முடியாமல் இருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களை உட்படுத்தி செயல் நடவடிக்கைத் திட்டம் முறைப்படி தயாரிக்கப்பட்டுள்ளது. | செயலாற்றலை மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | புரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக நிறுவகம் அறிந்திருந்த போதும் நிறுவகத்திற்கு உரித்தாக்கக் கூடிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய அளவீடுகளையும் இலக்கினை மதிப்பீடு செய்வதற்கான அளவு கோல்களையும் இனங் காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டதன் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிறுவகத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் (KPI) உள்ளடக்கப்பட வேண்டும். |